

அமரர்

# பத்மதேவி சச்சிதானந்தம்

அவர்களின்

# நினைவுத் தீபம்

06.02.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கொழும்பைப் பிறப்பிடமாகவும்,

இல 46 சிவன்கோவில் வீதி திருநெல்வேலியில்

வசித்தவரும்

**அமரர் திருநாவுக்கரசு சச்சிதானந்தத்தின்**

அருமை மனைவியும்,

மறைந்த பொன்னம்பலம் - வாலாம்பிகை

தம்பதியினரின் புத்திரியுமான

# அமரர் பத்மதேவி சச்சிதானந்தம்

அவர்களின் சிவபதடைந்தமை பற்றிய

# நினைவு மலர்

**06.02.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
07.01.1940

மறைவு
07.01.2013

அமரர்

# திருமதி பத்மதேவி சச்சிதானந்தம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு நந்தனவாகு ஆகுமதி மார்கழியே
நீண்டு தேயமர தசமிதனை – வேண்டி
பூண்டு பொலிதேவி புனிதன் பதமடைந்தாள்
மீண்டு வாரளிங்கு தெரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிருங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட்டேனா.

- அப்பர்

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசிலா மணி யேமறைப் பொருளே
ஏனமா எயி றாமையு மெலும்பும்
ஈடுதாங்கிய மார்புடையானே
தேன்நெய் பால்தயிர் ஆட்டுகந் தானே
தேவனே திரு ஆவடு துறையுள்
ஆனையே யெனை அஞ்சல் என்றருளாய்
ஆரெனக் குறவமரர் களேறே.

- சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறைஉறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடம் கொண்டாய்
இனிஉன்னை என்இரக் கேனே.

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேனுள்
அடியார் நடுவுள் இருக்குமருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைவோச்சிய சுந்தரனே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்கநெறி தந்த
பித்தற்கும் பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில
தேவர் சிறுநெறி சேராயே
வில்லாண்ட கனகத் திரள்பேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டெனும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா வென்று
கண்ணிலா நந்தா அருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணின வீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போ துன்அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர் தருத்தேனு மணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன்பருகிப் பலகாலும் என்தன்
உயிர்க் காதரவுந் தருள்வாயே
தம்பிதனக் காகவனத் தனையோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்று னைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

## அபிராமி அந்தாதி

இழைக்கும் வினைவழியே அடும்காலன்
எனைநடுங்க அழைக்கும் பொழுதுவந்து
அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலையாமளைக்
கோமளமே! உழைக்கும் பொழுது உன்னையே
அன்னையே என்பன் ஓடிவந்தே.

நாயகி நான்முகி நாராயணி கை
நளின பஞ்ச சாயகி. சாம்பவி, சங்கரி
சாமளை, சாதிநச்சு வாயகி. மாலினி
வாராகி சூலினி மாதங்கிஎன்
றாகியாதி உடையாள்
சரணம் அரண்நமக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவனே மறவேனு நான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடுகுலையுமுன்னே வந்து காத்தருளே.

தோலாற் சுவர்வைத்து நாவது காலிற் சுமதியிடு
காலால் எழுப்பி வளைமுது கோட்டிக் கைநாற்றி நரம்
பாவார்க்கை யிட்டுதசை கொண்டு வேல்ந்தஅகம்பிரிந்தால்
வேலாற் கிரிதுளைத்தோனிரு தாளன்றி வேதில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடும் நிமலனருள் கந்த
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி.

## நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும்இணை முழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகெண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டுங் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க.
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டுங் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா ர்சதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியேனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றாற்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கை கால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிடச்
செக்கு செக்கு செதில்செதி லாகச்
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெகுண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்காய்
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதித்த உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில ணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரிஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்த சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துட னாளும்
ஆசார த்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்த சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலா போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PREM RAWAT (குருமஹராஜி)
### அவர்களின் சிந்தனையிலிருந்து

எனது கண்ணோட்டத்தை உங்களுடன் கலந்து கொள்ள விடுங்கள். இந்த உடம்பில், தூசியினால் உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டில், அந்த அழியாப் பொருள் என்றால் என்ன? அது என்னவெனில் அது இருந்தது, இருக்கிறது - எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கும்.

எமக்குள்ளே உள்ள ஏதோ ஒன்றிற்கு இந்தத் தூசியை நடனமாட வைக்கும், பேசச் செய்யும், நடக்கவைக்கும் சாத்தியம் உள்ளது. அத்துடன் மிகவும் முக்கியமாக விரும்பவைக்கும் சாத்தியம் உள்ளது. இச்செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அது உயிர்வாழ்வு என அழைக்கப்படுகிறது. இந்தத் தொடர்பானது ஊறுபடாது இருக்கும்வரை நாம், உயிருடன் இருக்கின்றோம். நாம் உயிருடன் இருக்கும்வரை எம்மால் உணர முடியும். மூச்சு எனக்குள்ளே வருகிறது. நான் உள்ளுணர்வுடன் இருக்கின்றேன். நான் பார்க்கின்றேன். நான் உணர்கின்றேன். நான் விளங்கிக் கொள்கிறேன். அத்துடன் நான் நிறைவடையவும் விரும்புகிறேன்.

எதற்காக நாம் நிறைவடைய விரும்புகிறோம்? என்பதை யாராவது வந்து எமக்கு விளக்க வேண்டுமா? அது ஏனெனில் அதுதான் அந்த திறமான உணர்வு நிறைவடைவதல்ல அந்த விடயம். அத்துடன் இவ்விடத்தில் தான் ஊகங்கள் வருகின்றன. ஏனெனில் இப்பொழுது நீங்கள் நிறைவடைந்து விட்டீர்கள் என்று எவராலும் உங்களுக்கு கூறமுடியாது ஒன்றில் நீங்கள் அதை உணர்கிறீர்கள் அல்லது உணரவில்லை.

நீங்கள் அதை எப்படி அழைத்தாலும் பரவாயில்லை. நீங்கள் எதை உணர விரும்புகிறீர்கள், சிலர் ஆனந்தம் என்பார்கள் சிலர் பேரின்பம் என்பார்கள் சிலர் அன்பு என்பார்கள் எம்மால் இவை எல்லாவற்றையுமே உணர முடியும். ஆனந்தத்தையும், பேரின்பத்தையும் உணர்வது மட்டுமல்லாமல் அந்த அழிவற்றதை எம்மால் எமக்குள் கண்டுகொள்ள முடியும். அத்துடன் அதுதான் சகலதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடல் என்ற பெட்டி

நானும் மனிதன், நீங்களும் மனிதன் இதுவே நமது உறவு. இவ்வுலகில் வெவ்வேறு இடங்களிலும் மக்களின் நடத்தை, கலாசாரம், உணவு, உடைகள் எல்லாமே வெவ்வேறு விதமாக இருப்பதைக் காண்கிறேன். ஆனால், எல்லா மனிதர்களுக்கும் ஒரே மாதிரியான பொருள் ஒன்றும் இருக்கிறது அதுவே நமது மூச்சு, நமக்குள் மூச்சு செயல்படுவதாலேயே நாம் உயிருடன் இருக்கிறோம். ஆனால், நாம் இந்த முக்கியமான விஷயங்களை மறந்து, மனிதனை மனிதனாகப் பார்க்காமல், மதம் என்ற மூக்குக்கண்ணாடி வழியாக பார்க்கிறோம். அல்லது, அரசியல் என்ற மூக்குக்கண்ணாடி வழியாக பார்க்கிறோம். உண்மையாக மூக்குக்கண்ணாடி அணிவதால் பார்வை தெளிவாக வேண்டும். ஆனால், மனிதப்பிறவிகளின் கண்கள் எந்த விதமான மூக்குக்கண்ணாடி அணிந்தாலும், பார்வை தெளிவடைவதற்கு பதில் தெளிவற்றதாகிறது.

நான் உங்களிடம் ஒரு மிக எளிதான விஷயம் கூற விரும்புகிறேன். ஒரு பெட்டியில், ஒரு பொருள் வைத்து பூட்டப்பட்டிருக்கிறது. இது ஏதோ சாதாரண பெட்டி இல்லை. இதுவே மனித உடல்.

இந்தப் பெட்டியின் வெளிப்புறம் என்ன இருக்கிறது என்பதைப்பற்றி நான் பேசவில்லை. ஏனென்றால் வெளியே ஒவ்வொரு பெட்டியும் வெவ்வேறு விதமாக தென்படுகிறது. ஒரு பெட்டி வெள்ளியால் ஆனது மற்றொன்று தங்கப் பெட்டி, ஒரு பெட்டியில் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மற்றொரு பெட்டியோ வேலைப்பாடு இல்லாத மரப்பெட்டி. இந்தப் பெட்டியின் வெளியே இருப்பதைப்பற்றி எனக்கு சம்பந்தம் இல்லை. ஆனால், அதன் உள்ளே இருக்கும் பொருளைப்பற்றி பேசுகிறேன். இந்தப் பெட்டிக்கு என்னென்ன ஆகும் என்பதும் என் விஷயம் இல்லை. ஏனெனில், இது இயற்கையின் செயலால் கட்டுப்பட்டது. ஒரு நாள் இந்தப் பெட்டி செய்யப்பட்டது, ஒரு நாள் இது இருக்காது. ஆனால், இந்தப் பெட்டி இருக்கும் வரை அதனுள் உள்ள பொருளை அடையமுடியும். "அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் என்ன?" என்பதே கேள்வி. ஏனென்றால் இதுவரை மக்கள், இந்தப் பெட்டியின் வெளியே என்ன, எங்கே வைப்பது, எங்கே வைக்கக்கூடாது இதை எப்படி அலங்கரிப்பது, இதை எப்படி பாதுகாப்பது, இம்மாதிரியே எண்ணி வருகிறார்கள்.

இன்று இவ்வுலகில் நடைபெறுவது எல்லாம் இந்த பெட்டியால்தான். இந்தப் பெட்டி இல்லாவிடில், சட்டங்களோ, பெரிய - பெரிய நாடுகளோ, ஏழை - பணக்காரன் என்பதோ, இருந்திருக்காது. ஆனால், இந்தப் பெட்டி இருக்கிறது. அதன் உள்ளே ஒரு பொருள் வைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், பூட்டி இருப்பதால், மக்கள் வெவ்வேறு விதமாக கற்பனை செய்கிறார்கள். சிலர் "வைரம் வைத்திருக்கிறது", சிலர் "ஒன்றுமே இல்லை" என்கிறார்கள். "இந்தப் பெட்டி சொர்க்கத்திற்குச் செல்லும், அங்கு திறக்கப்பட்டு அந்தப் பொருள் கொடுக்கப்படும்", என்று கூறுபவர்களும் உண்டு. பல நூற்றாண்டுகளாக இந்தப் பெட்டியைத் திறக்க முயற்சி செய்திருக்கிறார்கள். இந்தப் பூட்டிய பெட்டியின் முன் மக்கள் கை கூப்பி வணங்குகிறார்கள். மாலை போடுகிறார்கள். பெரி - பெரிய சாவிக்கொத்துகளை கொண்டுவந்து, "இதில் ஏதாவது ஒரு சாவி அந்தப்பூட்டை நிச்சயம் திறக்கும்" என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள்.

இந்தப் பூட்டுத்தான் அறியாமை உங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் ஆனந்தத்தை அடையும் விஷயத்தில், அறியாமை என்ற பூட்டினால் என்ன குற்றம் என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குக் கிடைக்கக் கூடிய பொருளை கிடைக்காதபடி செய்வதே, அதன் குற்றம். தண்ணீரின் இயற்கை அதுடன் தொடர்பு கொள்ளும் பொருளை ஈரமாக்குகிறது.

அதே மாதிரி ஞானம் என்கிற சாவி இல்லாமல் அறியாமை என்ற பூட்டைத் திறக்க முயல்கிறார்கள். அவர்கள் அறியாமையில் மேலும் சிக்குகிறார்கள். ஞானவழிமுறை சாந்தி உண்டாக்குவதில்லை. சாந்தி எல்லா மனிதர்கள் உள்ளும் ஏற்கனவே இருக்கிறது. வெளியே செல்லும் கவனத்தை ஞானவழிமுறை உதவியால் உள்நோக்கித் திருப்பினால், உங்களுக்கு பரமானந்தத்தின் அனுபவம் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அந்த ஞானவழிமுறை என்ற சாவியைப்பற்றிப் பேசகிறேன். அதைக் கொண்டு அறியாமை என்ற பூட்டைத் திறந்து. பெட்டியில் இருக்கும் பொருளை அனுபவிக்கமுடியும். - அதை அறிந்த பின்பு, அறிவதற்கு வேறு ஒன்றும் பாக்கி இருப்பதில்லை. அதனால்தான் மஹான்கள் இந்த ஞானவழிமுறையை "ராஜவித்யா" என்று கூறுகிறார்கள். அதாவது எல்லா கல்விகளுக்கும் அரசன்.

இந்த ஞானவழிமுறையைப்பற்றி, "இது எல்லா கல்விகளுக்கும் அரசன் என்பதால், நான் கார் ஓட்டலாம்" என்று சிலர் எண்ணக்கூடும். சிலர், "அப்படியென்றால் நான் ஆகாயவிமானம் செலுத்தக்கூடும்" என்றும் எண்ணக்கூடும். இல்லை! அப்படி ஒருபொழுதும் செய்யாதீர்கள். உங்களுக்கு ஆகாயவிமானம் செலுத்தத் தெரியாவிட்டால், முயற்சி கூட செய்யக்கூடாது. முதலில் ஆகாயவிமானம் செலுத்த கற்றபிறகு அதைச் செலுத்தவும். இந்த ஞானவழிமுறையைக் கொண்டு அந்தப் பூட்டைத் திறந்தால் வாழ்க்கையில் பரமானந்தம் கிடைக்கிறது. என்பதால்தான் இது "ராஜவித்யா" என்று கூறப்படுகிறது. இவ்வுலகில் உள்ள வேறு விதமான ஆனந்தங்களை வேறு கல்வி அறிவால் அடையமுடியும். ஆனால், ஞானவழிமுறை வாழ்க்கையில் பரமானந்தம் கொடுக்கிறது. இது எல்லாவற்றிலும் சிறந்த ஆனந்தம், அதனால்தான் இது "ராஜவித்யா" இந்த ஞானவழிமுறை பெற்ற பிறகு உங்களுக்கு வேறு சில செய்ய வராமல் இருக்கலாம். ஆனால், நீங்கள் உங்கள் வாழ்க்கையில் திருப்தி அடைந்தால், மஹான்கள் கூறுகிறார்கள். "உங்களுக்கு அதுவே போதுமானது"

அதனால், இது எளிமையான விஷயம், பெட்டிக்குள் ஒரு விலை மதிககமுடியாத பொருள் வைக்கப்பட்டுள்ளது. நீங்கள்தான் அந்தப் பெட்டி, அந்த விலை மதிக்கமுடியாத பொருள் உங்கள் உள்ளே இருக்கிறது. அதில் அறியாமை என்ற பூட்டு போடப்பட்டிருக்கிறது. ஞானவழிமுறை என்ற சாவி என்னிடம் உள்ளது. நீங்கள் எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். என்று இல்லை. நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அந்த அறியாமை பூட்டைத் திறந்து அந்த விலை மதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத பொருளை அனுபவிக்க விரும்புகிறீர்களானால் நான் இருக்கிறேன்.

உங்கள் ஆனந்தத்தின் பண்டகசாலை உங்கள் உள்ளே இருக்கிறது. நீங்கள் பூட்டைத் திறந்தாலும். திறக்காவிட்டாலும் அது உங்களுள் இருக்கிறது. இது இம்மாதிரி விஷயம்தான் ஒருவர் பாலைவனத்தில் தாகத்தால் மடிந்துகொண்டு இருக்கிறார். பூமிக்கு அடியில் தண்ணீர் இருக்கிறது. ஆனால், எப்படி பருகுவார்? தண்ணீர் பருக கிணறு தோண்ட வேண்டும். அந்தந்த காலத்தின் ஆசான் இவ்வுலகத்து பாலைவனத்தில் கிணறு தோண்டுகிறார். அதிலிருந்து தண்ணீர் வருகிறது. அதனால், உங்கள் தாகத்தை தணிக்கமுடியும். ஒரு நதியோ, தண்ணீர் குழாயோ உங்களிடம் தண்ணீரைக் குடித்தே ஆகவேண்டும், என்று நிபந்தனை செய்வதில்லை. யாருக்கு தாகம் இருக்கிறதோ அவர் பருகுவார், யாருக்கு தாகம் இல்லையோ, அவர் பருகமாட்டார்.

நான் என்னுடைய இந்த செய்தியை உலகம் முழுவதும் சென்று வழங்குகிறேன். "நீங்கள் சாந்தி பெறுவதற்காக எந்த விஷயங்களின் மேல் நம்பிக்கை வைத்தீர்களோ, அது நடக்கவில்லை. ஒவ்வொரு நாளும் நிலைமை முன்னேறுதற்கு பதில் கீழ்நோக்கி செல்கிறது.

உங்களுள் சாந்தியும், ஆனந்தமும், புரிந்துகொள்ளும் சக்தியும் இருக்கின்றன. வெளிநாடுகளில் வேறு பொருள்கள் அநேகம் இருக்கின்றன. அதனால், வெளியே உள்ள எல்லா பொருள்களிலிருந்தும், கருவிகளிலிருந்தும் ஆனந்தம் கிடைக்கும் என்று ஒருபொழுதும் எண்ணாதீர்கள். ஆனந்தம் கிடைத்தது என்றால் அது ஞானவழிமுறையாலேதான் கிடைக்கும். ஏனென்றால், ஞானவழிமுறை உங்களை உங்களுள்ளே இருக்கும் ஆனந்தத்தின் பண்டகசாலைக்கு அழைத்துச் செல்கிறது. அதனால், ஆனந்தத்திற்காக உங்கள் உள்ளேயே தேடுவது அவசியம், வெளியே அல்ல.

பிரேம் ராவத்
(குருமகராஜி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்ம பாதச் சுவடுகள்

அமரர் பத்மதேவி சச்சிதானந்தம் அவர்கள் 1940 ஆம் ஆண்டு ஜனவரி ஏழாம் திகதி காலம் சென்ற பொன்னம்பலம் வாலாம்பிகை தம்பதியினரின் ஆறாவது குழந்தையாகக் கொழும்பு மாநகரில் பிறந்தார். தந்தையார் புகையிரதநிலைய அதிபராகையினால் தனது ஆரம்பக்கல்வியை இரத்தினபுரி திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் ஆரம்பித்தார். பறக்கடுவ இரயில் நிலைய விடுதியிலிருந்து இரத்தினபுரிக்கு இரயிலிலேயே சென்று வந்தார். பின்பு யாழ்ப்பாணம் நல்லூர் நன்நகரிலுள்ள பெரிய வீட்டுக்குக் குடும்பத்தாருடன் வந்து யா/ இந்து மகளிர் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார். சகோதர சகோதரிகளுடன் மிக இனிமையாக இவரது இளமைக்காலம் கழிந்தது. மூத்தசகோதரியான சரோஜினிதேவி இளையவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துவந்தார். இவரது தந்தையார் இவருக்கான பிற்கால வீட்டைக்கட்டிக் கொடுத்தார். நல்லூரின் பூர்வீக குடிகளிலொன்றாய் இவர்களது குடும்பம் திகழ்ந்தது. இவரது 16 வயதளவில் அன்னாரது தந்தையார் நல்லூர்க் கோயில் வாசலின் முன்பு சுவாமி தரிசனத்திலீடுபட்டிருக்கையில் மாரடைப்பால் இறைபதமெய்தினார். அதன்பின் அன்னாரது மூத்த சகோதரர் யோகரட்ணம் அவர்களுடைய பொறுப்பான கவனிப்பாலும், தாயாரது தன்னம்பிக்கையாலும் இளையவர்களுக்கு நல்ல வாழ்க்கை கூடிவந்தது.

1963ஆம் ஆண்டு இவருக்கு மிகமங்களமான தொன்றாக அமைந்தது. வண்ணார் பண்ணையைச் சேர்ந்த மறைந்த திருநாவுக்கரசு - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகனான மறைந்த பண்பாளன் சச்சிதானந்தத்துடன் திருமணம் கூடிவந்தது. நியம தம்பதிகளான இவர்களது வாழ்க்கையில் புதுமணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசியது. 1964ஆம் ஆண்டில் பொலிவுடன் பிறந்த பெண்குழந்தைக்குச் சசிரேகா எனப் பெயரிட்டு கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தார். தொடர்ந்து கணவனார் பதவியுயர்வு பெற்று கற்பிட்டி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு மாறிதலால் மேற்படி இடங்களிலும் வசித்தார். பின்னர் துணைவர் புலமைப்பரிசில் பெற்று ஜப்பானுக்கு தொழிற்பயிற்சி நிமித்தம் ஒரு வருட காலம் சென்றுவந்தார். பின்னர் தம்பதியினர்க்கு எட்டு வருடங்களின் பின் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு சியாமளன் எனப் பெயரிட்டனர். இக்காலங்களின் கார் முதலிய நவீன வசதிகளுடனும் வாழ்ந்து வந்தனர். இதே காலத்தில் இந்தியாவுக்குத் திருத்தல யாத்திரைக்காகச் சென்று வந்தார். இக்காலகட்டங்களில் அன்னார் சமய சம்பிரதாயங்கள் பக்கம் மிகவும் ஈர்க்கப்படலானார். பாடல்பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவை இருந்த நகரங்களிலும் கணவர் குழந்தைகளுடன் வாழும் வாய்ப்பைப் பெற்றார்.

இக்காலங்களின் போதுதான் அன்னார் குருமகராஜி எனும் சற்குருவின் சற்சங்கங்களில் கவரப்பட்டு மகராஜியின் ஞானவழி சென்றார். கிரமமான சற்சங்கங்களின் பின்னர் இவருக்கும், கணவருக்கும் மகளிற்கும் கிடைத்தற்கரிய ஞான அறிவு கிடைத்தது. தினமும் வீட்டில் குருமகராஜியின் ஆர்த்தி மற்றும் பிறகீர்த்தனைகள் பாடுவதுடன் தினந்தோறும் இருதடவை பெற்ற ஞான அறிவை பயிற்சித்து மன அமைதிமிக்கவரானார். அதே சமயம் சைவசமய பிரார்த்தனை வழிபாடுகளிலும் முன்னிற்பார். நல்லூர் முருகனின் மேல் அபாரமான பக்தி நிறைந்தவர். கடுமையான கந்தசஷ்டி போன்ற விரதங்களையும் பிடித்துவந்தார். அன்னாரது இறைபக்தியின் பலனாக பிள்ளைகளிருவரும் பல்கலைக்கழகம் சென்று படித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997ஆம் ஆண்டு மகளுக்கும், 2002 ஆம் ஆண்டு மகனுக்கும் திருமண நற்காரியத்தைச் செய்து முடித்தார். 1999 இல் தனக்கு பரத்வாஜன் என்ற பேரன்பிறந்ததால் பேருவகை யடைந்தவர் சிறிது காலம் மகளுடன் கண்டி மற்றும் கொழும்பில் வசித்துவந்தார். பின்னர் யாழ் திரும்பினார். அயலவர்களுடன் மிக அன்பாகப்பழகும் இவருக்கு அதிகளவில் அயலவர்கள் நண்பர்களாயிருந்தனர். 2004ஆம் ஆண்டு வரை யாழ் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக (தாவரவியல்) இருந்த தன் மகளுடனிருந்தவர் அதன் பின்னர் நாவலப்பிட்டியில் மகனுடன் வசித்துவந்தார். இக்கால கட்டத்தில் சஞ்சய், நிதுஷ் என்ற மகனின் இரு குழந்தைகளுக்குப் பாசமிகு பேர்த்தியாரானார். இடையிடையே கொழும்பு சென்று மகளுடனும் தங்குவார். எக்காலகட்டத்திலும் கணவனும் மனைவியும் இணைபிரியாத தம்பதிகளாகவே வாழ்ந்தனர்.

கண்டியில் வாழும் போதும் அடிக்கடி பேராதனை குறிஞ்சிக்குமரன், கோவிலுக்குச் சென்று வருவதுடன், குரு மகராஜியின் சற்சங்கங்களிலும் தவறாமல் கலந்து கொள்வார். 2008 இன் இறுதிப் பகுதி அன்னாருக்குத் துயரம் மிக்க தொன்றாக அமைந்தது. அன்புக் கணவர் தொண்டைப்புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். அவருக்குக் கடைசிக் காலம் வரை அருகிலிருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டார். 2009 ஜனவரி 8 அன்று ஆசைக்கணவர் இவரைத் தனியே தவிக்கவிட்டு இறைபதமடைந்தமை இவருக்கு சொல்லொணாத் துயரத்தைக் கொடுத்தது. இருந்தும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் அன்பில் அத்துயரை மறைத்துக் கொண்டார். மகனின் பட்டமேற்படிப்புக்கு உறுதுணையாக இருந்தார். 2010 இறுதிப் பகுதியில் மகன் பிரித்தானியா புறப்பட்டபின், தனது மனமுவந்த நல்லூர் வீட்டில் சுற்றமும், சகோதரிகளும் சூழ வாழ்ந்துவரலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012 மார்ச் மாதமளவில் மகனின் அழைப்பில் இங்கிலாந்து புறப்பட்டார். அங்கே லிவர்பூல் (Liverpool) மாநகரில் மகனின் குடும்பத்துடன் மிக மகிழ்ச்சியாகக் கழித்தார். இக்காலங்களில் பிரபலமான Black Pool, London, Liverpool Titanic Museum, Birminham Balaji kovil, Knowsley Safari Park போன்ற இடங்களுக்குச் சென்று களித்தார். 2012 ஜூலையில் தாய்நாடு திரும்பியவர் மீண்டும் நல்லூரிலேயே வாழ்ந்துவந்தார்.

இதன்போது அவர் எதிர்பாராமல் இடது கண்ணில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் கொழும்பில் ஒரு அவசரகண்சத்திர சிகிச்சைக்குள்ளானார். இதன்பின்னர் அவரது இடது கண்ணில் ஏற்பட்ட பார்வைக் குறைவு சுகதேகியாக இருந்தவருக்கு கடும் மன உளைச்சலை ஏற்படுத்தியது.

2012 டிசெம்பர் 25 ஆம் திகதி துணைவனாரின் 4வது ஆண்டுத் திவசம் வந்தது. இதற்கு உற்றார் உறவினர் அனைவரையும் அழைத்து தானே முன்னின்று விருந்தோம்பல் செய்தார்.

2013 ஜனவரி 1ம் திகதி அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்தவருக்கு அதே தினம் மாலை காய்ச்சல் ஏற்பட்டது. மறுதினம் மதியம் திடீரென மயங்கிவிழுந்தார். யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவருக்கு நோய் கடுமையானது. இவருக்கு மிக மோசமான நியூமோனியாவும், மாரடைப்பும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதயம் மிகவும் பலவீனமான நிலையில் அவசரசிகிச்சைப்பிரிவில் மூன்று நாட்கள் இருந்து அவர் பிறந்த அதே 07.01.2013 நாளில் பேரக்குழந்தைகள் பிறந்தநாள் வாழ்த்துக்கூற வந்த நேரத்தில் அனைத்து சொந்தங்களையும் நண்பர்களையும் தவிக்கவிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரானின் திருவடிகளில் கலந்தார். தனது கணவர் இறந்த அதேநாளில் அன்னாரது இறுதிக்கிரியைகள் வெகு சிறப்பாக நடந்தேறின.

கள்ளங்கபடமற்ற மனமும், முப்பொழுதும் இறைசிந்தனையும், குருமகராஜியின் ஞானமார்க்கத்தை பின்பற்றும் ஞான உள்ளமும் கொண்ட திருமதி பத்மதேவி அவர்களின் ஆன்மா இறைவனின் பாதாரவிந்தங்களில் என்றும் பேரமைதியுடன் இருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு "

**குறள் 72**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள அம்மா

உங்கள் கல்வெட்டுக்கு ஏதாவது எழுதட்டாம். அப்பாவுக்கு எழுதியதே நேற்றுப்போலிருக்க உங்களுக்கு எழுதவும் காலம் வந்துவிட்டது.

சின்ன வயதிலிருந்து என்னை மிகவும் செல்லமாக வளர்த்தீர்கள். படி படி என நச்சரித்தோ, அடித்தோ நானறியேன். உங்கள் சுபாவம் அப்படி அதனால் நான் மகனை படிக்கவில்லை என்று அடித்தால் உங்களுக்கு பொல்லாத கோபம் வரும். "நான் உங்களை அடிச்சு வளர்க்கவில்லை. உது தான் எனக்கு இங்க இருக்க விருப்பமில்லை" என்று என்னை ஏசுவீர்கள். என் School காலங்களில் நேரஞ்செண்டு எழும்பி சாப்பிட நேரமில்லாமல் சப்பாத்தை தூக்கிக்கொண்டு காருக்கு ஓடும்போது சாப்பாட்டுத் தட்டோடு என்னோடு ஓடி ஓடி சாப்பாடு ஊட்டுவீர்கள். என் பல்கலைக்கழக காலத்திலும் இது அப்பப்ப நடக்கும். ஆனால் கோபிக்கமாட்டீர்கள். பிள்ளைகளையோ, பேரப்பிள்ளை களையோ கஷ்டப்பட விடமாட்டீர்கள். நீங்கள்தானம்மா எப்பவும் எனக்கு எல்லா வேலையும் செய்து தந்தீர்கள். நான் பெரிதாக எதுவும் உங்களுக்கு செய்யவில்லை.

உங்கள் கல்யாணப்படங்கள் நாட்டுப்பிரச்சனைகளில் அழிந்து விட்டன. அதில் நீங்கள் மிகவும் அழகு. நீண்ட இரட்டைப்பின்னலுடன் உங்கள் படங்களைப் பார்க்க ஆசையாக இருக்கும். இப்ப ஞாபகத்துக்கு ஒரு படமும் இல்லை. உங்களோடு போன இந்தியா கோவில்கள் கதிர்காமம், திருக்கோணேஸ்வரம், கேதீஸ்வரம், அநுராதபுரத்தில் மாமி வீடு என்று எல்லாம் ஞாபகமிருக்கு நல்லூர்த்திருவிழா நேரம் வீடு களைகட்டும் பெரியப்பா, மாமா, மாமி எல்லாம் எங்கள் வீட்டிற்குதான் வருவார்கள். வீடு ஜே, ஜே என்று இருக்கும். அந்த வீட்டிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் இப்ப இல்லை என்னும் போது நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நல்லூர் முருகனிடம் உங்களுக்கு பக்தி அதிகம். உங்கள் வாழ்க்கையில் கஷ்டங்கள் வந்தபோது முருகபக்தியும், குருமகராஜி என்ற உங்கள் குருவின் நாமமுமே உங்களை நம்பிக்கையோடு எல்லாவற்றையும் கடந்து உங்கள் பிள்ளைகளை நல்ல நிலைக்குக் கொண்டு வரவைத்தது. நாங்கள் இன்று நன்றாக இருக்கிறோமென்றால் அதுக்கு நீங்கள் தான் அத்திவாரம்.

நீங்கள் சேலைகட்டி குங்குமப்பொட்டு வைத்தபடி சிரிக்கும் போது அழகாக இருப்பீர்கள். அப்பா போனபிறகு உங்களைப் பார்க்கும் போது மனம் கஷ்டமாக இருக்கும். தனித்துப் போனீர்களே நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். தம்பி London க்கு போகும்போது உங்களுக்கு என்னோடு இருக்க விருப்பமெண்டாலும் நான் இருக்கும் இடத்தில் உங்களுக்கு கதைக்க பேச ஆட்களில்லை. உங்களுக்கு கலகலப்பாக யாரிடமாவது கதைக்க வேண்டும். யாழ்ப்பாணம் போக வேணுமெண்பீங்கள். அதனால் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக சந்தோஷமாக இருப்பீங்கள் என்றுதான் அங்கு இருக்கவிட்டோம். நல்லா ஓடியாடும் வரை இருங்கள் முடியாட்டி என்னிடம் வாருங்கள் என்று சொன்னேன். இப்பிடி திடீரெண்டு சொல்லாமல் கொள்ளாமல் உங்கள் முடிவு இருக்குமெண்டு நினைக்கவேயில்லை. மார்கழி **25** அப்பாவின் திவசத்துக்கு நான் வந்தபோது கூட நீங்கள் எல்லா ஆயத்தமும் செய்து பம்பரம் மாதிரி சுழன்றீர்கள். உங்களுக்கு நல்ல மனத்திருப்தி அப்பாவுக்கு எங்கள் வீட்டில் முதல் தடவை திவசம் செய்தது அந்த நாட்களில் பெய்த அடைமழையில் உங்களைச் சரியாக கவனிக்காமல் விட்டிட்டீங்களா அம்மா. இரண்டு மாதம் முன்பு அப்பா எங்கட வீட்டில வந்து படுத்திருப்பதாக கனவு கண்டதாக சொன்னீர்கள் உண்மையில் அப்பா உங்களைக் கூட்டிப்போகத்தான் வந்தாரோ? **2011**இல் கூட இந்த வயதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காம மலை ஏறி இறங்கியிருக்கிறீங்கள். 2013, 1ஆம் திகதி காலமை கூட கோயிலுக்கு போட்டு வந்து எனக்கு வாழ்த்தினீங்கள். பிறகு நடந்ததெல்லாம் கனவா எண்டு இருக்குது. இதுதான் உங்களுக்கு எழுதி வைத்த காலமென்றால் நல்லவேளை இனி என்னோட தான் இருக்க வேணுமெண்டு உங்களை பிடித்து வைத்திருக்காமல் யாழ்ப்பாணத்தில் இருக்கவிட்டது. கடைசி 2 வருடங்களும் உங்களுக்கு பிடிச்ச மாதிரி கோயில்களுக்கு போய், தெரிஞ்ச ஆக்களோட கதைச்சு, சகோதரங்களோடை சந்தோசமாக இருந்தீங்கள். தை, 7ஆம் திகதி உங்கட பிறந்த நாளே இறந்த நாளா போச்சுது. உங்களுக்கு Wish பண்ணோணும் எண்டு நினைச்சிருந்தன். கடைசியில் அப்பா இறந்த நாளுக்கு முதல் நாள் நீங்களும் போயிட்டீங்கள். என் மகன் சொல்றான் தாத்தா அம்மம்மாக்கு குடுத்த B'day gift அது. அவா தாத்தாவ பாக்கப்போயிட்டா என்று.

உங்கள் கண் Operation உங்கள் உடலையும், மனவலிமையையும் நிறையவே பாதித்துவிட்டது என்று நினைக்கிறன். எப்பவும் கண்ணைப் பற்றி கவலைப்படுவீர்கள் அத்தோடு இப்பவும் விரதம் பிடிப்பீர்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்பதில்லை. "இப்பிடி சாப்பிடாம இருந்து வருத்தம் வந்தா நான் உங்களை பார்க்கமாட்டன்" என்று மிரட்டினாலும் "நீ என்ன பாக்கத்தேவையில்லை நான் 3 நாளைக்கு மேல படுக்கையில் இருக்கமாட்டன்" என்று பதில் தயாராக இருக்கும். அதே மாதிரி 3 நாளுக்கு மேல் நீங்கள் இருக்கவில்லைத்தான்.

உங்கட கண் Operation நேரம் கையில் கொண்டு வந்து சாப்பாடு தந்து Sustogen கரைச்சு தந்து கொஞ்சநாள் பாத்தான். அது தான் இப்ப கொஞ்சம் மனநிறைவு எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியா மார்கழி 27 நான் கொழும்புக்கு போகும் போது உங்களை ஒரு நிமிடம் அதிகமாகவே பார்த்தேன். சிவப்பு Shorty உடன் கொஞ்சி வழியனுப்பினீங்கள் ஏனோ மனதில் கவலையாக இருந்தது. தனிய உங்களை விட்டுவிட்டுப்போவது மாதிரி வந்து கொஞ்ச நாள் என்னோட இருங்கோவன் எண்டு கேட்பம் எண்டு நினைச்சிட்டுப் பொங்கல் நேரம் வரமாட்டீங்கள் என்று நினைத்து கேட்கவில்லை. பொங்கல் முடிய கேப்பம் என்று போய்விட்டேன். ஆனால் அது தான் உங்களை நல்ல நிலையில் நான் பார்த்த கடைசி நாள் பிறகு நான் வந்து கொஸ்பிற்றலில் பார்க்கும் போது வந்ததே உங்களுக்கு தெரியது அப்படியே போய்விட்டீர்கள். நல்ல சா அவவுக்கு என்கிறார்கள் எல்லோரும் நீங்களும் பிள்ளையளுக்கு கஷ்டமில்லாமல் போகவே வேணுமெண்டு தான் விரும்பினீங்கள் உங்கட சுறுசுறுப்புக்கு இன்னும் கொஞ்சக்காலம் நீங்கள் இருந்திருக்கலாம் அம்மா. இப்ப எனக்கு அம்மா, அப்பா இருவரும் இல்லை. என் குடும்பம் எனக்கிருந்தும் ஏதோ தனிய மாதிரி இருக்கு எங்களை எங்களுக்காக மட்டுமே அன்பு காட்டவும் எந்த எதிர்பார்ப்புமில்லாமல் அக்கறை காட்டவும் அம்மா, அப்பாவால் மட்டும் தானே முடியும்.

அப்பாவும் நீங்களும் நல்லூர் முருகனின் காலடியில் இருந்து எங்களை கவனிப்பீர்கள் என்று தான் நான் நம்புகிறேன்.

**இப்படிக்கு**
**மகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ர அப்புக்குட்டி.........

*2012.01.07 : 12.18*

MICU / Jaffna BP-unrecordable

Pulse - 32,27,28....

அம்மாவின் கைபிடித்தபடி அக்கா.....

தலை தடவியபடி நான்.....

முத்து முத்தாகக் கண்ணீர்.....

"போலீ ஸ்ரீ சற்குரு மகராஜிற்குஜே...."

*2013.01.03 : 19.49*

Point pedro

"அம்மா என்னம்மா செய்யிது...... அம்மா.....!

அக்கா நான் Phone ஐக் காதுக்குள் கிட்டப் பிடிக்கிறன் நீங்கள் ஏதாவது சொல்லுங்கோ.....!"

*2013.01.02 : 17.13*

அம்மாவுக்கும் எனக்கும் சண்டை

"இண்டைக்கு கீத்தாக்கா பாக்காட்டி என்ன நடந்திருக்கும் தெரியுமா.... சொல்லிப்போட்டன் பேசாமல் என்னோட வெளிக்கிடுங்கோ!

*2013.01.01 : 10.04*

"ஆ... சியாம் Happy new year உங்களுக்கு.... எப்படி பத்மினி, பிள்ளையள் சுகமே?

*2012.12.25*

"ஆ லக்கி உள்ளுக்கைவா. அமிர்தா எங்க? சசிசண்ணிட்ட மாவிலை கொஞ்சம் ஆயச்சொல்லு.... ஆ... இஞ்சை ரஜிவாறான்...."

*2012.12.21 : 22.24*

The Proposed world's demise day **2012** படம் TV வியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடுது "அம்மா அம்மா இஞ்ச வந்து பாருங்கோ TV இல் காட்டுறாங்கள். America வில New York City நிலத்துக்குள்ள போகுது". "அய்யோ இஞ்ச பார் உண்மையாவே உலகம் அழியுது சாத்திரத்தில சொன்னமாரி...."
"சும்மா இருங்கோப்பா மாமியைப் போட்டு ஆகலும்......"

Same day 19.28

Point Pedro வில கலர் Light போட்டு பட்டம் பறக்குது "அம்மா அம்மா இங்கபாருங்கோ வால்வெள்ளியொண்டு தெரியுது"
"ஓமடா இஞ்சைபார் உலகம் அழிய முதல் வால்வெள்ளி தெரியுமாம்...."

***2012.11.26 : 17:35***

" இஞ்சே ரெண்டுபேரும் ஒருக்காப் போய் பெரியம்மாவைப் பாத்திட்டு வாங்கோ.... அவ நேற்று விழுந்தெல்லே போனா...."

***2012.10.22 : 8.10***

"ஹலோ சியாம் உனக்கு Happy Birthday..." "Thank You அம்மா நான் நுவரேலியாவில நிக்கிறன்"

***2012.09.06 : 14.04*** Durden Hospital

"என்ன இந்த மனிசன் ஒண்டும் கதைக்குதில்ல கண் எப்ப Clear ராத் தெரியும் எண்டு கேள்.

***2012.06.30 : 13.35*** Manchestr Air Port

"அப்ப இந்த Wheel Chair தள்ளிற ஆள் Qatar airport இலயும் வருவானே?...."

***2012.04.23 : 10.12*** Knowsley safari Park / Liver pool

ஒரு பெரிய சிங்கம் வந்து காருக்குப் பக்கத்தில் அம்மாவின்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவோட படுத்திட்டுது. "ஐயோ குருமகராஜி..... சஷ்டியை நோக்கச் சரவணபவனார்....."

***2012.04.20: 15.20*** Liverpool UK

"ஆ இதே Titanic Ship என்னவடிவாச் செய்திருக்கிறாங்கள்."

***2012.03.29: 7.33*** - Liver pool UK

"அம்மா இங்கவந்து பாருங்கோ இண்டைக்கு வெளியில நல்லா Sleet கொட்டியிருக்கு..."

"ஓமடா நல்ல பால் வெள்ளையா நிலமெல்லாம்... ஆ இதென்னப்பா சரியான குளிர்"

***2009.01.08 : 14.12*** - Kandy

"ஐயோ சியாம் ...... அப்பாவைப் பார்.....!

***2008.11.29*** - Kandy

"என்னப்பா சாப்பாடு Blender இல அடிச்சுவைச் சிருக்கிறன் கொஞ்சமாக் குடியுங்கோவன்...."

***2005.09.10 : 09.10*** நிதுஷ் பிறந்தநாள்

"என்ன நட்சத்திரமம்மா?" "ஆ... அனுஷம் இண்டைக்கு அக்காவின்ட அதே நட்சத்திரத்திலயே பிறந்திருக்கிறான்...."

***2004.08.26*** சஞ்சு பிறந்த நாள்

"முழியையும் ஆளையும் பார். இப்பிடித்தாங்கோ பத்மினி நான் வைச்சிருக்கிறன். உங்கட சாயல் தான்"

***2002.02.03*** My wedding Day

"ஆ நல்லாயிருங்கோ நல்லாயிருங்கோ முருகா....!"

***1992.12.16***

"அம்மா Cut off வந்திட்டுது" "பிள்ளையாரே இரு நான் இந்தப் பருவக்குளத்துப் பிள்ளையாருக்கு ஒருக்காப் போட்டுவாறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1986.10.12*

"அது சத்திவராது மீன் திண்டால், நான் குழச்சுத்தீத்திவிடுறன் அப்பு"

***1984*** - எனக்கு காலில கொடுவாக்கத்தி வெட்டி பெரிய காயம் "ஆய்யோ என்ரபிள்ளை - ஓடிவாங்கோ ராதா Nursing Home க்கு போக சைக்கிளை எடு...."

***1979*** - "அம்மா கதை சொல்லுங்கோ...."

"ஆ இப்பிடிப்பபடப்பு.... Little red coat எண்டொரு அக்கா இருந்தவவாம்"

***1977*** - சூரன்போர் ..... நல்லூர்

" அம்மா தெரியுதில்லை தூக்குங்கோ"

"ஆ என்ர அப்பு இஞ்சைவா.... ம்மா என்ன குண்டுமாரிப் பாரம் லக்கி எப்பிடியப்பா இவனைத் தூக்கிறது"

***1976*** - கதிர்காமம் ரஜியண்ணாவின்ட தோளிலநானாம்.

"கீத்தா.... ரஜி அவனைத்தூக்கிக் கொண்டு ஏறட்டும் நாங்கள் நிப்பம்...."

***1973*** - சுப்பிரமணியம் பார்க் அப்பாவின்ட கார் பின்சீட்டில் இருந்த நான் நிறைய பிஸ்கட்டை வாயுக்க அடைஞ்சதால் மூச்சுத்திணறிப்போச்சாம். "அய்யோ என்ர பிள்ளையை முருகா நீ தான் காப்பாத்த வேணும்...."

***1972.10.22*** - Jaffna Hospital

"அம்மா இங்கபாருங்கோ உங்களுக்கு ஆம்பிளைப்பிள்ளை பிறந்திருக்கு.... எட்டே கால்றாத்தல்"

"ஆ... என்ர அப்புக்குட்டி...."

**உங்கட அப்புக்குட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடந்தது தான் நடக்காத மாதிரி இருக்கு

சசி ஏங்கிப் போய்
அம்மாவைப் பாத்தது
ஜான்சி அக்கா அம்மாவின்ரை
தலையைத் தடவி அழுதது
ரஜி அண்ணா 3 நேரமும்
அம்மாவைப் பார்த்தது
சியாமும் நம்பிக்கையோட
மருத்துவ குறிப்புகளைப் பாத்தது
எல்லாம் நடந்ததுதான்
நடக்காத மாதிரி இருக்கு!

வருத்தம் வரவர
கூடிக் கொண்டு போனது
சசி அம்மாவின்ரை காதுக்கை
அம்மா திரும்பி வாங்கோ
எண்டு நம்பிக்கையோட சொன்னது
பரத் அம்மம்மாவின்ரை காதில
எழும்பி வாங்கோ எண்டது
சஞ்சு ஏங்கிப் போய் கவலையா
அப்பம்மாவை பார்த்து அழுதது
சியாம் அம்மாவின்ரை காதுக்கை
மகராஜின்ரை பாட்டு பாடினது
அம்மா நிரந்தரமா கண்ணை மூடியது

எல்லாம் நடந்தது தான்
நடக்காத மாதிரிஇருக்கு!

தண்ணி நிக்கிற இடம்
மண் போட வேணுமெண்டு
அம்மா சொன்ன இடத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கு கிரியைகள் செய்தது
மழை கொட்டிப் பெய்தது
கம்பஸ் பெடியங்கள் அழுதது
பூப்போட்டு கும்பிட்டது
பேரப்பிள்ளைகள் சுத்திவர
பந்தம் பிடிச்சு நிண்டது
மழை பெய்ய பெய்ய அம்மாவை
தூக்கிச் கொண்டு போனது

எல்லாம் நடந்தது தான்
நடக்காத மாதிரி இருக்கு!

ரஜி அண்ணா எல்லா விதமான
ஆயத்தங்களையும் செய்தது
சனங்கள் எல்லாம் கவலையா
வந்து அழுது போனது
செம்மணிசுடலையிலை மழையும்
காத்தும் கடுமையா அடிச்சது
அம்மாவை விறகோட வைச்சு
சியாம் கடமைகள் செய்தது

எல்லாம் நடந்தது தான்
நடக்காத மாதிரி இருக்கு!

நடந்ததுகள் நடக்காமலும்
நடக்கிற மாதிரி இருக்கிறதுகள்
இப்பவும் நடந்துகொண்டு இருந்தாலும்
எவ்வளவு நல்லா இருக்கும்
எல்லாரும் சேர்ந்து கடவுளட்டை
இதைத்தான் கேக்கிறம்.

**கே. என். சண்முகதாசன் (மருமகன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமி என் மனதிலிருந்து.......

தாய்க்கு தலைமகளாய் வந்துதித்தேன்
தாயின்றித் தவித்தேன்
பாசமிகு அன்னையாய் உருவெடுத்தீர்கள்
பாசமுடன் அன்புசெய்தீர்கள்
பேரர்கள் இப்பாரினிலே வந்துதித்தபோது
பேரானந்தமாய் பெரும் சேவை செய்தீர்கள்
கொஞ்சினீர்கள், மிஞ்சினீர்கள்
கொஞ்சநேரமும் ஓயாது கடமைபுரிந்தீர்கள்
எல்லாக் கடமையும் இனிதாய் முடிந்ததென்று
எல்லாம் வல்ல இறைவனடி சேர்ந்தீர்கள்
பிள்ளைகளும் அப்பம்மா எங்கே என்று தேடுகையில்
பிராட்டியும் இல்லை அவர்களைப் பாதுகாக்க
இல்லத்தில் எமக்கிருந்த பெரியதுணை
இனி எங்கே போவோம் தேடியுமை
ஐயனுடன் நிரந்தரமாய் சேர்ந்திட்டீர்கள்
ஐயகோ மனம் வெம்புதிங்கே எண்ணியுமை
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாமிங்கே
உளமார உருகுகின்றோம், இறைவனிடம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மருமகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா!

நினைவுகள் இப்போதும் நிரம்பி இருக்கின்றன
நீங்கள் என்னுடன் கழித்த நாட்கள்
அம்மாவும் அப்பாவும் தூரதேசம் போன நாட்களில்
அம்மாவாய், அம்மம்மாவாய், தோழனாய் நண்பனாய்
நீங்கள் எனது மனமறிந்து, வயிறறிந்து, உணர்வறிந்து
உடைகளும் உணவும் உதவிகளும் செய்தது

நாவலப்பிட்டியில், யாழ்ப்பாணத்தில் எனது 5 வயது வரை
உங்களுடன் கழித்த அந்த 5 வருடங்கள்
முழுமையாய் நினைவுகள் நிரம்பியே இருக்கின்றன.

கொழும்புக்கு வரும் போதெல்லாம் முதலில் என்னை
அன்பாக கூப்பிட்டு ஆயிரம் ரூபாய் தருவீர்கள்
எனக்கு விரும்பிய ஏதாவதை வாங்கச் சொல்வீர்கள்

எனது விளையாட்டுத் தோழன் எப்போதும் நீங்களே
பயங்கரமான பேய்க்கதை சொல்லி உங்களை பயமூட்டுவேன்
என்னையும் எனது நாய் Flash இனையும் நீங்கள் விரும்புவீர்கள்

நான் எப்போதும் உங்களருகில் தான் இருப்பேன்
நீங்கள் சொன்னவை எப்போதும் பெறுமதியானவை
ஒவ்வொரு சொற்களும் எனது ஞாபகத்தில் உள்ளன.

நீங்கள் தான் இவ்வுலகில் எனது மிகச்சிறந்த
தங்கமான நண்பன், தோழன் எல்லாமே - எனது அம்மம்மா!

**பரத்வாஜன் (பேரன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு அப்பம்மா.... என்ன நடந்தது?

Happy birthday அப்பம்மா, Happy Birthday அப்பம்மா என்று சொல்வதற்கு காலை 6.00 மணிலியிருந்து, மாலை 6.00 மணிவரை காத்திருந்தோம்.

அப்பா வந்து அப்பம்மா வீட்டுக்கு போவோம் என்று கூட்டிவந்தபோது நல்ல சந்தோசமாக வந்தோம்

அப்பம்மா Pink நிறத்தில் அழகான பட்டுப்புடவை உடுத்தி, எல்லா நகையும் போட்டு மிகவும் அழகாக நடுவீட்டிலே படுத்துக்கிடந்தார்.

அப்பம்மா Happy Birthday to you என்றுஎத்தனை தடவை சொன்னபோதும் அவர் thank you சொல்லவுமில்லை, எங்களுடன் கதைக்கவுமில்லை.

அப்பம்மாவுக்கு என்ன நடந்தது....?

- ❖ எங்களுடன் ஓடிப்பிடித்து விளையாடினார்.
- ❖ எங்களுடன் பாம்பும், ஏணியும் விளையாடினார்.
- ❖ எங்களுக்கு சோறும், கறியும் ஊட்டினார்,
- ❖ எங்களுக்கு நிலா காட்டினார்,
- ❖ எங்களுக்கு முருகன் கதை, பிள்ளையார் கதை சொன்னார்
- ❖ எங்களுக்கு 'Jack and the beans' கதை சொன்னார்,
- ❖ எங்களுடன் இரவில் படுத்து, பாட்டுப்பாடிக்காட்டினார்.
- ❖ எங்களுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசினார்.
- ❖ எங்களுக்கு 'Happy new year' சொன்னார்.

ஏன் அப்பம்மா இப்ப பேசாமல் படுத்துள்ளார்.... எங்களுக்கு இன்னும் விளங்கவில்லை அப்பம்மாவுக்கு என்ன நடந்தது?

**சஞ்சய். நிதுஷ்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் அக்காவின் ஆதங்கம்....

பத்மா.....

என்னருமைத் தங்கை அவள் அடுத்த வீட்டில் தான் வாழ்ந்தாள் நாம் கொழும்பிலிருந்து இங்கு வந்து இப்போது ஒரு வருடம் தான் ஆகிறது. அந்த 365 நாட்களில் ஒவ்வொரு நாளும் இங்கு வந்து பேசிவிட்டுத்தான் போவாள். தான் சமைக்கும் கறிகளில் ஒன்றைத் தப்பாமல் தந்து விடுவாள்.

தை மாதம் முதலாம் திகதி நான் New Zealand இலுள்ள இன்னொரு தங்கை ராணியுடன் தொலைபேசியில் அளவளாவிக் கொண்டிருந்தேன். இதில் பத்மாவும் வந்து கலந்து கொண்டாள். அதுதான் கடைசியென்று நான் கனவிலும் எண்ணவில்லை. இறைவா நான் எப்படித் தாங்குவேன் ஏன் இந்தக் கொடுமை. உன் பிரிவில் சிக்கித்தவிக்கும்.

**ஆசை அக்கா**
**சரோஜினிதேவி**

நல்லாரி ணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறுநிலையுள்ளதோ அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி ஏகம்பனே.

பட்டினத்தார் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Late Mrs. Pathmadevi Satchithanantham

*"நித்தியவாணி, நிரஞ்சனி, அர்ப்பணிப்பு*
*நிறை சங்கரி, ஓம் நமோ, ஓம் நமோ!*

She was the epitome of Self - sacrifice. பெண்ணாய்ப் பிறந்த அனைவருக்கும் சுய அர்ப்பணிப்பிற்கு ஒரு உதாரணமாகத் திகழ்ந்தவர் இந்தப் பெண் தெய்வம்.

இவரின் இந்த அர்ப்பணிப்பின் பலாபலன்கள் தான் சசியும், சியாமும், இறையடிசேர சில தினங்களுக்கு முன் இந்த மகராசி தமக்கை சரோஜினியிடம் வந்து சொன்னா "அக்கா நான் ஒரு கனவு கண்டேன். அதில் அவர் வீட்டுக்கு வந்தார். வந்து பூசைத்தானத்தில் அமர்ந்து கொண்டார்" அதன் அர்த்தம் தான் இன்று மெய்யாகி விட்டதே.

May the souls of these two magnificent man and wife, rest in peace in their heavenly abode.

**பாசமுள்ள அத்தான்**
**ஸ்ரீபத்மநாதன்**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

**(குறள் 50)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே போனாய் பத்தி....

என்னருமை அக்காவே...
அண்டைக்கு சியாம் வந்து உன்னைக்
கூட்டிக்கொண்டு போகும் போது
நாலு நாளில் நான் வந்திடுவன்
வீட்டையும் பெடியங்களையும்
ஒருக்காப் பார் என்று சொன்னாய்
நீ சொன்னமாதிரியே நாலு நாளில்
வீட்டுக்கு வந்தாய் உன்பிறந்த நாளும்
அதுவுமாக அழகான றோசா நிறப்புதுச்
சேலையுடுத்து நகையெல்லாம் போட்டு
ஆனால் என்னோடு பேசவில்லை
இந்த வீடுதானே உனது உயிர்
எத்தனை தடவை பிள்ளைகள் வரக்
கூப்பிட்டும் திரும்ப ஓடிவந்திடுவாய்
London இல் சகிலாவுக்கு உன்னைப்
பார்க்கக் கிடைத்த பாக்கியம், இளையவள்
சர்மிக்குக் கிடைக்கவில்லை
பெரியம்மா பெரியம்மா என்று அவள்
விம்முகிறாள்
நான் இனி என்ன செய்வேன்
தனித்துப் போனேனே
ஓயாத உனது குரல் இனி என்
காதுகளில் கேட்காதே

துயருடன் அருமைத்தங்கை
லலிதாதேவி
சண்முகசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தியன்ரா... பத்தியன்ரா...

"பத்தியன்ரா.... பத்தியன்ரா ...."
பத்தியன்ரா.... பத்தியன்ரா என்று
ஓடித் திரிந்து கதைத்து மகிழ்ந்த
நாட்கள் நினைவுக்கு வந்து என்னைக்
கொல்கிறது. அதை எப்படி மறப்பேன்
மறக்கக் கூடியதா அது?
இப்பொழுதும் நீங்கள் கொழும்பில்
இருப்பதாகத் தான் நான் நினைத்துக்
கொண்டிருக்கிறேன். அது
உண்மையாக வராதா என்று
ஏங்குகிறேன். திடீரென்று எல்லாம்
நடந்து முடிந்துவிட்டது. எல்லாம்
கனவாய்ப் போய்விட்டது
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்

**அன்புடன் பேறாமகள்**
**கீத்தா (பிரதீபா)**

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே; நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே.

மூதுரை (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னம்மா எங்கே?

இது அடிக்கடி நடப்பதுண்டு
எனது இளம் வயதில் நான் கொழும்பில்
திடீரென்று வீட்டில் சொல்லாமல்
கொள்ளாமல் யாழ்தேவி ஏறிவிடுவேன்
யாழ் மண்ணின் பற்று காரணமாக
நேராக விடிய பத்தியன்ரா வீட்டில்
"ஆ.. ரஜி வா வா.... சாப்பிடு"
ஏன் வந்தாய் எதற்கு வந்தாய் என்ற
கேள்விகள் அவவுக்குள் இல்லை
ரஜி வந்தான் சந்தோஷம்
அடுத்த நாளும் பத்தியன்ரா வீட்டிற்கு
ஒன்று வரும். அப்பாவின் தந்தி!
"Rajeevan Please return home immediately"
இது அடிக்கடி நடப்பதுண்டு
இப்படித்தான் என் சின்னம்மா
ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு.....

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

**உங்கள் பெறாமகன்**
**ரஜிவன் குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் திருவுருவே பத்தியக்கா!

லக்கி லக்கி என்று அழைப்பீர்களே
இனியார் வருவார் உங்கள் இடத்துக்கு
எனது மனத்துயர் நன்மை தீமைகள்
உங்களுடன் தானே கதைப்பேன்
எமக்குப் பெற்ற தாய்போல் உடன்பிறந்த
சகோதரிபோல் எத்தனை வருடகாலம்
பழகினோம். சச்சிச்சித்தப்பாவின்
திவசம் 25ஆம் திகதி வெகு சிறப்பாகச்
செய்து முடித்தீர்களே. அன்று மாலையே
மிகவும் திருப்தியுடன் அவர்திவசம் முடித்து
விட்டேன். இனி எனது காலம் எப்போதோ
தெரியாது என்று கூறினீர்களே.
நினைத்தோமா இப்படி வெகு விரைவில்
நீங்கள் மறைவீர்கள் என்று
டிசம்பர் 31ஆம் திகதி பகல் நீண்ட நேரம் பற்பல
கதைகள் பேசினீர்களே. இப்படிப் பிரிவதற்கா
என்று அதிர்ச்சியடைந்தோம்.
எல்லாம் கனவு போல் ஆகிவிட்டதே.
ஆறாதே எம்மனம். உங்கள் வீட்டடியில்
போகும் போது உங்கள் முகம் தான் கண்ணில்
நிற்கிறது. வீடே வெறிச் சோடிய
மாதிரி இருக்கிறதே. எனது பேத்தி
ஆதர்ஷனா கூட பத்திக்கா, பத்திக்கா
என்று கூறுவா. அயலவர் எல்லோருடனும்
அன்புடன் பழகினீர்களே.
இன்று மனவேதனையுடன் வாடிநிற்கும்

லக்கி, அமிர்தா குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதியா? விளையாட்டா?


விதியா? விளையாட்டா?
விபரம் புரியவில்லை
பிரிவை நாம் எழுத
பேனா மறுக்கிறது
காரணம் கேட்டோம்
இரத்தம் தோய்த்து எழுதட்டாம்
உன் பிரிவைத் தாங்காது
உறவுகள் கண்ணீர் வடிக்கின்றது
ஊரிலே உன் பாதம்
பட்ட இடமெல்லாம்
பசுமையாய்த் தெரிகிறது நீயோ
பறந்து சென்று விட்டாய்
உற்றார் உறவுகள்
தேவையென நாடிடுவாய்
குற்றமில்லா நெஞ்சோடு
அயலுடன் பழகிடுவாய்
கூற்றவன் செய்திட்ட சதியாலே
மாற்ற முடியாமல் மறைந்தாயோ.

**வைத்திய அத்தியட்சகரும் அனைத்து**
**வைத்தியசாலைப் பணியாளர்களும்**
**ஆதார வைத்தியசாலை**
**பருத்தித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவொன்று உதிர்ந்தது இன்று....



பூவொன்று உதிர்ந்தது இன்று....
வாசம் வீசிய மலரே....
நீ வாடிப் போனாயோ....
அறைகளில் அக்கறையாய்....
அன்பு காட்டினீரே....
பழகி வந்து எங்களிடம்....
பண்பு காட்டினீரே....
வருத்தம் வந்ததால்....
வாடினோம் நாங்கள்....
நீர் வாடிப் போனதால்....

உமது நிழலைத் தேடும்
யா/ பல்கலைக்கழக
மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணங்கள் ஈடேற்றுவாயா

இறைவா!!
மனிதங்கள்
மரணித்துப்போன
மண்ணுலகில்
புனிதம் ஒன்று - உன்
பாதம் வந்தடைந்தாள்
ஏற்றுக்கொள்....

திருநெல்வேலியின்
தீர்க்க தரிசனம்
தீவிரமாய் உன் நாமம்
துதித்த
பதிகம் ஒன்று - உன்
பாதம் வந்தடைந்தாள்
ஏற்றுக்கொள்....

பசித்தவனுக்கு
பாற்சோறு கொடுத்தவள்
பாதிக்கப்பட்ட
பாவங்களுக்கு
பாசம் கொடுத்த
பாரிஜாதம் ஒன்று - உன்
பாதம் வந்தடைந்தாள்
ஏற்றுக்கொள்....

என்னிடத்தே
தாயாகி....
அன்பாகி....
கருணையாகி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ப்பறித்தவளை....
சாவின் கரத்தால்
கரம் பற்றினாயே - ஐயனே
தவறவிட்ட பிள்ளை போல்
தவிக்கின்றேன் - நாம்
ஐயகோ....

மன்னவா...
மரணித்து போன
வாழ்வியலோடு
பின்னிப்பிணைந்து
வாழ்க்கை - யான்
மறுக்கவில்லை
மறக்காமல் மாசற்றவளை
மலர்கையால்
அரவணைத்துக்கொள் - அதுவே
தன் பிரார்த்தனை....

கலியுகத்தில் - என்
விண்ணப்பங்கள்
வீணடிக்கப்பட்டதனால்
உன்னிடம்
முறையிட்டுள்ளேன்
முறையாக
ஏற்றுக்கொள் (வாயா)....

ஜெ. செல்வராஜ், (ஷியாம்)
3ஆம் வருடம், (புவியியல் சிறப்புக்கலை)
கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடுதியாக ஏற்படும் குழப்ப நிலை
## (ACUTE CONFUSIONAL STATE OR DELIRIUM)

மருத்துவ விஞ்ஞானத்துறையில் உள்ள ஒரு குழப்பகரமான நோய் நிலமை இதுவாகும். இது ஒரு குறுகிய நேரத்தில் நோயாளியின் உணர்திறனில் ஏற்படும் குழப்பகரமான மாற்றமும் அதனால் நோயாளியின் சூழலை அறியும் ஆற்றல் (Cognition) பாதிக்கப்படுதலுமாகும். இது மூன்று வகைப்படும்.

1. இயற்கையை மீறிய சுறுசுறுப்பு நிலை (HYPERACTIVE DELIRIUM) இவ்வகையில் நோயாளி அமைதியற்று உளக்குழப்பமுடையவராகவும், மாயத்தோற்றங்களால் பாதிக்கப்பட்டவராகவும் (DELUSIONAL) சுயதீங்கு விளைவிப்பவராகவும் (SELF HARM) இருப்பார்.

2. மந்தமான சோர்வு நிலை
   (HYPOACTIVE)
   இவ்வகையானவர்கள் மிக மந்தமாகவும் ஒரேமாதிரியாக செயற்பாடுகள் உள்ளவராகவும் காணப்படுவர். இவ்வகை பெரும்பாலும் கண்டறியப்படுவதில்லை.

3. கலப்பு நிலை (MIXED TYPE)
   மேற்கூறிய இரு வகைகளும் கலந்து காணப்படும்.

இந்த நோய் நிலைக்கான ஆபத்துக் காரணிகள் (RISK FACTORS) எவை?

1. வயது முதிர்ந்தவர்கள்
2. சூழலை அறியும் ஆற்றல் குறைந்தவர்கள் (COGNITIVE IMPAIRMENT)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஏற்கனவே சடுதியான குழப்பநிலைக்குள்ளானவர்கள்.
4. பலவித நோய்ப் பாதிப்புள்ளவர்கள்
5. பலவித மருந்துகளை உள்ளெடுப்பவர்கள்
6. அதிக மனஅழுத்தம் (SEVERE STRESS) குறிப்பாக புதிய சூழலில் வசித்தல், அண்மையில் சத்திர சிகிச்சைக் குட்பட்டவர்கள் அல்லது காயப்பட்டவர்களில் ஏற்படலாம்.

◉ இந்நோய்க்கான நேரடிக்காரணங்கள் (CAUSES) எவை?

D - DRUGS (அதிகளவு மருந்து மாத்திரைகள் உள்ளெடுக்க ஆரம்பித்தல் அல்லது நிறுத்துதல், மருந்துகளின் அளவுகளில் மாற்றம், மதுபானம்)

E- ELELTROLYTE IMBALANCE (உடலில் நீர்ச்சத்துக் குறைவதால் ஏற்படும்)

L- LACK OF DRUGS (மருந்துகள் சடுதியாக நிறுத்தப்படல் மதுபானம் உட்பட)

I- INFECTION (தொற்று சுவாசப்பை அழற்சி (PNEOMONIA), சிறுநீரகழற்சி)

R- REDUCED SENSORY INPUT (கண்பார்வைக்குறைபாடு, செவிட்டுத்தன்மை)

U- URINARY / FAECAL PROBLEM ( சிறுநீர் கழிக்க முடியாமை அல்லது மலங்கழிக்க முடியாமை)

M- MYOCARDIAL AND LUNGS (மாரடைப்பு, நியுமோனியா போன்றவற்றால் மூளையில் ஏற்படும் பிராணவாயுப் பற்றாக்குறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◉ இந்நோய் நிலைக்குள்ளானவர்கள் எவ்வாறு பராமரிக்கப் படுகின்றனர்?

இது ஒரு மருத்துவ அவசர நிலை (MEDICAL EMERGENCY) உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்க வேண்டும். நோயாளியின் உடல் வெப்பநிலை, நரம்பியல் பரிசோதனை, சூழலை அறியும் ஆற்றல் போன்றவை பரிசோதிக்கப்படும். அடிப்படையான இரத்த பரிசோதனைகள், ஈரற்றொழிற்பாடு மற்றும் சிறுநீரக செயற்பாட்டுக்கான இரத்த சோதனைகள் மேற்கொள்ளப்படும். சிலசமயம் CT ஸ்கான் (மூளை) முண்ணான் பாய்பொருள் சோதனை போன்றவையும் தேவைப்படலாம். பல நோய் நிபுணர்களின் ஆலோசனைக் கமையவே சிகிச்சையளிக்கப்படும்.

நேரடி நோய்க்காரணிகளைக் கண்டறிந்து (நோய்த் தொற்று, கனிப்பொருள் குறைபாடு) அவற்றை நீக்குதல், பாதிப்பை ஏற்படுத்தியதாகக் கருதப்படும் மருந்துகளை நிறுத்துதல், மேலும் நோய்நிலையை மோசமாக்கும் காரணிகளை அகற்றுதல் (வலிநிவாரணம், சிறு நீரடைப்பை நீக்குதல், மலச்சிக்கலை நீக்குதல்), சரியான கவனிப்புமுறை (PROPER NURSING), நோயாளியின் அறியுமாற்றலைக் (COGNITION) கண் காணித்தல் போன்ற சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

◉ எவ்வாறு இந்நோய் நிலைமையைத் தடுக்கலாம்?

இந்நிலையைத் தடுப்பது மிகக் கடினமானது. ஆனால் பொதுவாக இந்நோய்நிலைக்கான ஆபத்துக்காரணிகள் இருப்பவர்களைப் பராமரிப்பவர்களுக்கு இந்நோய் பற்றிய எச்சரிக்கையுணர்வு இருக்கவேண்டும். ஏற்கனவே இந்நோய் நிலைக்குட்பட்டவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்து கொள்ளவேண்டும்.

**Dr. B. தாமோதரன்**
**பொது வைத்திய நிபுணர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுமையில் விபத்தினால் ஏற்படும் தலைக்காயம்

65 வயதிற்கு மேற்பட்டவர்களில் தலைக்காயம் ஏற்படுவதற்கு பிரதான காரணியாக இருப்பது இடறி விழுதல் ஆகும். இதற்கு அடுத்தபடியாக விளங்குவது மோட்டார் விபத்து ஆகும். வெளிப்புற மூளைய மென்சவ்வு வயது முதிர்ந்தவர்களில் மண்டை ஓட்டுடன் நெருக்கமாக ஒட்டிக்கொள்வதாலும், அஸ்பிரின் போன்ற இரத்த உறையா மாத்திரைகளை இவர்கள் அதிகம் உட்கொள்வதாலும் மூளைக்கு ஏற்படும் பாதிப்பு விபத்தின் போது அதிகரிக்கின்றது.

பிற நோய்களான மன அழுத்தம், ஞாபகமறதி, பார்கின்சன் நோய் என்பன இடறி விழுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கவே செய்கின்றன. விபத்தினால் இவர்களில் ஏற்படும் பாரதூரமான விளைவு மூளையினுள் அல்லது மூளைக்கு வெளியே ஏற்படும் இரத்தகசிவும் அதனால் ஏற்படும் மூளைய இறக்கமும் ஆகும். இவ்வாறான பாதிப்பிற்கு உள்ளானவர்கள் மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, மனக்குழப்பம், பேசமுடியாமை, வாந்தி, அதீத தலையிடி, சமநிலைகுழப்பம், மயக்கம் என்பனவற்றுடன் தோற்றமளிக்கலாம். விபத்தின் பின்பு தலைக்காயத்துடன் ஏற்படுகின்ற இவ்வாறான அறிகுறிகள் தீவிரமாக ஆராயப்பட வேண்டியவை ஆகும்.

மூளையில் ஏற்படுகின்ற பாதிப்பிற்கமைய நோயாளிக்கு சத்திரசிகிச்சை தேவையா அல்லது தேவையில்லையா என்பது தீர்மானிக்கப்படும். மேலும் இவ்வகையான நோயாளிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் நிரந்தரமாக இழக்கப்பட்ட இயலுமைகளை சமநிலைப்படுத்த உதவிபுரியும். பின்வரும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சுயாதீனமாக தங்களுடைய வீட்டில் அல்லது சமுதாயத்தில் வாழ்வதற்கு உதவும்;

1. ஞாபக குறிப்பேடு தயாரித்தல்
2. குறிப்பிட்ட தினத்தில் செய்ய வேண்டிய செயல்களை முன்னரே தீர்மானித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Using Check List
4. வீட்டில் உள்ள அறைகளையும் பொருள்களையும் அடையாளப்படுத்தல்
5. Setting Timers to remember tasks

மேலும்

முதியவர்கள் சுயாதீனமாக வாழ்வதற்கு Personal care assistance, in - home Support, Home Modifications, Transportation Services போன்ற உதவிகளும் சேவைகளும் பொருத்தமானதாக இருக்கும்.

விபத்தில் ஏற்படும் தலைக்காயத்தை தவிர்ப்பதற்கான சில வழிகள்

உறுதி, சமநிலை, ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஒழுங்கான தேகாப்பியாச முறைமையை உருவாக்குதல்

- ◊ சுதந்திரமான தடையில்லாத அசைவுகளுக்காக வீட்டிலுள்ள தடைகளை அகற்றி வீட்டை பாதுகாப்பானதாக்குதல்.
- ◊ வீட்டின் வெளிச்சத்தை மேம்படுத்துதல்.
- ◊ மருந்துகளால் மயக்கம் மற்றும் தலைச்சுற்று ஏற்படாது இருப்பதை உறுதிசெய்தல்.
- ◊ நோயாளியின் கண்பார்வையை உறுதிசெய்தல்.

**Dr. S.** கிரிதரன்
சத்திர சிகிச்சை நிபுணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பகாலத்தில் ஏற்படும் அதியுயர் இரத்த அழுத்த நோய்
# (PRE - ECLAMPSIA)

◊ அதி உயர் இரத்த அழுத்தம் (PREECLAMPSIA) என்றால் என்ன?

இது கர்ப்பகாலத்தில் ஏற்படும் மிகவும் அபாயகரமான ஒரு நோய். இதன் போது உயர் இரத்த அழுத்தத்துடன் சிறுநீருடன் அதிகளவு புரதம் வெளியேறும் தன்மை காணப்படும்.

இதன் மிதமான நிலையில் எந்த ஒரு குணங்குறிகளும் தென்படாது. நோய் மேலும் தீவிரமடையும் போதுதான் குணங்குறிகள் தோன்றும். இருநூறில் ஒரு கர்ப்பிணிக்கு இந்த நிலை ஏற்படும். பெரும்பாலும் குணங்குறிகள் கர்ப்பகாலத்தின் பின் பகுதியில் தான் ஏற்படும். சில சமயம் மகப்பேற்றின் பின்பு கூடத் தோன்றலாம்.

◊ என்ன குணங்குறிகள் ஏற்படலாம்?

- தலைவலி
- மந்தமான/ தெளிவற்ற பார்வை
- சில சமயம் மின்னல் பளிச்சிடுதல் போன்ற தன்மை
- வயிற்று நோ (குறிப்பாக வலது விலா எலும்புக் கீழ்ப் பகுதியில்)
- வாந்தி மற்றும் பிரட்டல்
- சிலசமயம் மூச்சு விட சிரமப்படுதல்.

இவ்வாறான குணங்குறிகள் மிக அபாய கிரமானவை எனவே கர்ப்பிணித்தாய்மார் உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இந்தநோய் வளரும் குழந்தையைப் பாதிக்குமா?

ஆம். இந்த நோயால் சூல்வித்தகத்தின் (PLACENTA அதாவது குழந்தைக்குப் போசணை வழங்கும் பகுதி) வளர்ச்சி பாதிக்கப்படும் எனவே குழந்தையின் வளர்ச்சியும் பாதிக்கப்படும். குழந்தையைச் சூழவுள்ள நீரின் அளவும் குறைந்து காணப்படும். சிலவேளை சூல்வித்தகத்தின் வளர்ச்சி மிகவும் பாதிப்படைந்தால் குழந்தை வயிற்றினுள்ளேயே இறந்துவிடக் கூடிய சூழ்நிலை கூட ஏற்படலாம். ஆகவே குழந்தையின் வளர்ச்சியை தொடர்ந்து அளவிடுதல் முக்கியமானதாகும்.

◈ எப்படியான பெண்களில் இந்த நோய் ஏற்படும்?

இது யாருக்கும் ஏற்படலாம் ஆயினும் பின்வரும் வகையானோரில் இந்த நோய் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்

- முதலாவது கர்ப்பம்
- 40 வயதுக்குக் கூடிய பெண்கள்
- கர்ப்பிணியின் தாய் அல்லது சகோதரிக்கு குறிப்பிட்ட நோய் ஏற்பட்ட நிலை
- முந்தைய கர்ப்பத்தில் இந்நோய் ஏற்பட்ட நிலை
- உடற்பருமன் கூடியவர்கள் (> 90kg)
- இரட்டைக் கர்ப்பம்
- வேறு நோய்கள் ஏற்கனவே இருத்தல்
  நீரிழிவு, சிறுநீரக நோய், உயர் இரத்த அழுத்தம்
- வாடகைக் கர்ப்பம் (EGG DONATION)

◈ எவ்வாறு இந்த நோயைக் கண்காணிக்கலாம்?

மிதமான நிலையில் அடிக்கடி கிளினிக்குக்குப் போய் இரத்த அழுத்தம் மற்றும் சிறு நீரில் புரத அளவு போன்றவற்றை அளந்து கொள்வது போதுமானது. ஆனால் நோயின் வீரியம் கூடும் போது வைத்தியாசாலையில் நிற்கவேண்டிய நிலை ஏற்படும். சில சமயம் குழந்தையை பிறப்பிக்க வேண்டிக் கூட ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ என்னென்ன பரிசோதனைகள் உள்ளன?

- அடிக்கடி இரத்த அழுத்தத்தை அளவிடுதல்
- சிறுநீரில் உள்ள புரத அளவீடு
- இரத்த சோதனை- குறிப்பாக குருதிச் சிறு தட்டுக்களின் அளவு, இரத்தம் உறையும் தன்மை, ஈரல் தொழிற்பாடு, சிறுநீரகத் தொழிற்பாடு
- குழந்தையின் வளர்ச்சி அளவீடு (ஸ்கான் பரிசோதனை)
- குழந்தையின் இதயத்துடிப்பு

◈ எவ்வாறு சிகிச்சையளிக்கப்படுகிறது?

- தீவிரமான நோய் நிலைமையில் கர்ப்பிணித்தாய் மகப்பேற்று மற்றும் மயக்க மருந்து வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பில் இருக்கவேண்டும்.
- இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மாத்திரைகள் அல்லது ஊசி மருந்துகள் தேவைப்படும் அத்துடன் ஓய்வும் அவசியம். ஆனால் இவ்வகை மருந்துகள் வயிற்றில் வளரும் குழந்தையை பாதிக்காதவை.
- தீவிர உயர் இரத்த அழுத்தம் சிலவேளை உயிராபத்தமிக்க வலிப்பு நோயாக மாறக் கூடும். இந்நிலையைத் தடுக்க சிலவேளை முன்கூட்டியே குழந்தையைப் பிரசவிக்கவேண்டி ஏற்படலாம். இது சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலமாகவோ அல்லது மருந்துகள் மூலமாகவோ நடக்கலாம்.

◈ உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்படும் வலிப்பு நோய் என்றால் என்ன?

இது உயிராபத்துமிக்க தீவிர நோய்த்தாக்கம், இரத்த அழுத்தம் மிக அதிகமாவதால் ஏற்படும். சிலசமயம் மிதமான அல்லது சாதாரணமான இரத்த அழுத்தத்தின் போதும் வலிப்பு ஏற்படலாம். இரண்டாயிரம் தாய்மாரில் ஒருவருக்கு இவ்வகை வலிப்பு ஏற்படலாம். இவ்வகை வலிப்பு ஏற்பட்டால் பின்வரும் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கர்ப்பிணித்தாய் மரணம்
- சிறுநீரகம் செயலிழத்தல்
- ஈரல் செயலிழத்தல்
- நுரையீரல் செயலிழத்தல்
- ஈரல் பாதிப்பு மற்றும் குருதி உறைதலில் ஏற்படும் குறைபாட்டால் உருவாகும் பாரிய நோய் நிலமை (HELLP SYNDROME)

இவ்வாறான விளைவுகள் ஏற்படின் நோயாளி அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவார்.

◈ வலிப்பு ஏற்பட்ட பின் குழந்தை பிறக்கச் சரியான காலம் எது?

வலிப்பு கட்டுப்படுத்த பட்டவுடன் குழந்தை பிறப்பிக்கப்படுதல் வேண்டும் பெரும்பாலும் சிசேரியன் மூலம் குழந்தை பிறப்பிக்கப்படும்.

◈ உயர் இரத்த அழுத்தத்தால் குழந்தைக்கு ஏற்படும் பாதிப்புகள் என்ன?

குறைமாதப் பிரசவம் ஏற்படலாம். இதனால் குழந்தைக்கு சுவாசத் தொகுதியில் பிரச்சனைகள் ஏற்படும். இதனால் குழந்தை அதிதீவிர சிகிச்சைக் கண்காணிப்பில் சிலமாதங்கள் இருக்கவேண்டி ஏற்படலாம். சிலவேளையில் குறைமாதத்திலேயே குழந்தையைப் பிறப்பிக்க வேண்டி ஏற்படும் சூழ்நிலையில் கர்ப்பிணிக்கு இருதடவை ஊசி மருந்து கொடுக்கப்படும். இதனால் குழந்தைக்கு ஏற்படும் சுவாசக்கோளாறுகள் குறைவடையும்.

சிலவேளை அதியுயர் இரத்த அழுத்தத்தால் குழந்தைக்குப் போசனை வழங்கும் சூல் வித்தகம் குறை மாதத்திலேயே கர்ப்பப் பையின் சுவரிலிருந்து கழன்று விடுவதால் பாரிய இரத்தப்போக்கு ஏற்பட்டு குழந்தை இறக்கநேரிடலாம். இதன் போது சில சமயம் கருப்பையை அகற்ற வேண்டிய சூழ்நிலை கூட ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◊ குழந்தை பிறந்த பின் எவ்வகையான பராமரிப்பு தாய்க்கு வழங்கப்படுகிறது?

நாற்பது வீதமான வலிப்புகள் குழந்தை பிறந்த பின்பே ஏற்படுகிறது. எனவே தீவிர கண்காணிப்பு அவசியம். தாய்மார் சிலநாட்கள் வரை வைத்திய சாலையிலேயே நிறுத்தி வைக்கப்படுவர். உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகளும் சிலசமயம் தொடர்ந்து எடுக்க வேண்டிவரும். இரத்த அழுத்தம் தொடர்ந்தும் அதிகமாக இருப்பின் அல்லது சிறுநீரில் தொடர்ந்தும் புரதம் காணப்படின் நோயாளி ஆறுவார காலத்தில் விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெறவேண்டும்.


◊ இந்த நோய் அடுத்த கர்ப்பத்தில் ஏற்படுமா?
ஆறு பேரில் ஒருவருக்கு இதே நிலமை ஏற்படலாம். எனவே அடுத்த குழந்தைக்குத் திட்டமிடும் போது மகப்பேற்று நிபுணரின் ஆலோசனையை ஆரம்பத்திலேயே பெற்றுக் கொள்ளவேண்டும்.

**Dr. S. சியாமளன்**
**மகப்பேற்று பெண்நோயியல் நிபுணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




* காலஞ்சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.

**இந்த மாற்றம் உலக நியதியாகும்.**

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. - 021 2264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org